


**19.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. மத்திய அமைச்சரவை கூட்டம் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில், புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

2. ஊரக மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக புரட்சிகரமான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சவுஹான் கூறியுள்ளார்.

3. நாட்டின் புதிய தலைமை தேர்தல் ஆணையராக திரு. கியானேஷ்குமார் இன்று பொறுப்பேற்றார்.

4. வடசென்னை வளர்ச்சிப்பணிகளுக்காக 6 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் கராச்சியில் தொடங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>அமைச்சரவை கூட்டம்</u>

மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல்வேறு திட்டங்களின் செயலாக்கம், முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

## பிரதமர் - சத்ரபதி சிவாஜி

சத்ரபதி சிவாஜி மன்னரின் 395-வது பிறந்த தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திரமோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அளப்பறிய வீரமும், தொலைநோக்கு பார்வையும் கொண்ட மன்னர் சிவாஜியின் தலைமை, சுயராஜ்யத்தை நிறுவ உதவியதோடு, அவருடைய வீரம் எதிர்கால சந்ததியினருக்கு உத்வேகமாக இருக்கும் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சத்ரபதி சிவாஜி மகராஜாவின் வீர தீரம் என்றென்றும் நினைவில் போற்றப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

போர் யுக்திகளுக்கும், வீரத்திற்கும் நிர்வாகத்திறனுக்கும் பெயர் பெற்ற மன்னர் சிவாஜி ஏழை எளிய மக்களின் நலனுக்காக எவ்வித பாகுபாடுமின்றி செயலாற்றியவர் என்று புகழாரம் சூட்டினார்.

❖❖❖❖❖❖

## சிவ்ராஜ்சிங் சவுஹான்

ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு புரட்சிகரமான திட்டங்கள் செயல்படுத்துவதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆப்பிரிக்க, ஆசிய ஊரக மேம்பாட்டு அமைப்பின் 77-வது செயற்குழு கூட்டத்தில் இன்று துவக்கவுரையாற்றிய அவர், இந்நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

உணவு உற்பத்தியில் இந்தியா தற்போது தன்னிறைவை எட்டியிருப்பதோடு, பிற நாடுகளுக்கும் உதவுவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 10 கோடி மகளிர், 90 லட்சம் சுயஉதவி குழுக்களில் இணைக்கப்பட்டு 50 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் ஒருகோடியே 25 லட்சம் மகளிர் லட்சாதிபதிகளாக உருவாகி இருப்பதாக அவர் பெருமிதம் வெளியிட்டார்.

இந்தியாவின் தொழில்நுட்ப நிபுணத்துவம், அறிவாற்றல், வெற்றிகரமான கொள்கைகள், சிறந்த திட்டங்கள் உள்ளிட்டவற்றை பரிமாறிக்கொள்ளும் தளமாக இந்த கூட்டம் இருக்கும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

## கியானேஷ்குமார்

நாட்டின் தலைமைத் தேர்தல் ஆணையராக திரு.கியானேஷ்குமார் இன்று பொறுப்பேற்றார்.

18 வயது பூர்த்தியடைந்த இந்திய குடிமக்கள் அனைவரும் வாக்களிக்கும் கடமையை தவறாது நிறைவேற்ற வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்திய அரசியலமைப்பு தேர்தல் சட்டங்கள் நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாக்காளர்களுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் தொடர்ந்து செயலாற்றும் என்றார்.

தேர்தல் ஆணையராக திரு. விவேக் ஜோஷியும் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெறவுள்ள ஜி-20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நாளை அங்கு புறப்படுகிறார்.

இக்கூட்டத்தில் அவர் பங்கேற்பதால் ஜி-20 நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு வலுப்பெறுவதோடு, தென்னாடுகளின் குரலை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பாக அமையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2 நாள் பயணமாக தென்னாப்பிரிக்கா செல்லும் அமைச்சர், ஜி-20 வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் என தெரிகிறது.

❖❖❖❖❖❖

அந்தர்சிங் ஆர்யா

பழங்குடியினர் சமூகத்தின் மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை பேணி காக்கும் நடவடிக்கைகளை இளையோர் மேற்கொள்ள வேண்டுமென்று இதன் தேசிய ஆணைய தலைவர் திரு. அந்தர்சிங் ஆர்யா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆணையத்தின் 22-வது நிறுவன நாளை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், பிரதமரின் அன்னையின் பெயரால் மரம் வளர்ப்போம் திட்டத்தை தமது ஆணையம் முன்னெடுத்துச் செல்வதாக கூறினார்.

தேசிய ஆணையத்தின் சார்பில் இதன் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மரக்கன்றுகளை நடுவதாக எடுத்துரைத்த அவர், இதன் மூலம் பழங்குடி சமூகத்தினரின் குறிக்கோளான நீர், வனம், நிலம் இயக்கம் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

பாதுகாப்பு ஒத்துழைப்பு குழு கூட்டம்

இந்தியா - மலேஷிய நாடுகளுக்கு இடையிலான 13-வது பாதுகாப்பு ஒத்துழைப்பு குழு கூட்டம் மலேஷிய தலைநகர் கோலாலம்பூரில் இன்று நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங் பங்கேற்ற இந்த கூட்டத்தில் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

சைபர் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு பிரிவில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளும் இதில் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான அரசு 90 சதவிகித தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை புளியந்தோப்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை 712 பேருக்கு இன்று வழங்கினார்.

வடசென்னை பகுதியை, தென் சென்னைக்கு இணையாக மேம்படுத்தும் வகையில், வளர்ச்சிப் பணிகளுக்காக 6 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

உதயநிதி

திருச்சி சூரியூர் ஜல்லிக்கட்டு மைதானம் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானமாக உருவாக்கப்படும் என்று துணைமுதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி திருவெறும்பூர் சூரியூரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமையவுள்ள ஜல்லிக்கட்டு மைதானத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், அடுத்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டிகள் இதில் நடத்தப்படும் என்றார்.

இந்த மைதானத்தில் உடற்பயிற்சி அரங்கம், உள்விளையாட்டரங்கம், பிரம்மாண்ட பார்வையாளர் மேடை ஆகியவை அமையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

தமிழ்தாத்தா

தமிழ்தாத்தா உ.வே. சாமிநாத அய்யரின் 171-வது பிறந்த நாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஓலை சுவடிகளை சேகரித்து அச்சில் ஏற்றி தமிழ்மொழிக்கு அவர் ஆற்றிய அரும்பணியை போற்றுவோம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு. தங்கம் தென்னரசு, திரு. மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖

கோவி. செழியன்

நாட்டிலேயே மகளிர் கல்வி அதிகமுள்ள மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டம் இண்டூர், பாலவாடி, இலக்கியம்பட்டி, அதியமான்கோட்டை, நல்லம்பள்ளி பகுதிகளில் நடைபெற்ற 3-ம் கட்ட, மக்களுடன் முதல்வர் திட்ட

முகாமில் பேசியஅவர், மக்கள் இம்முகாமை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தினார்

இந்நிகழ்வில் 56 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, 196 பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

<u>அன்பில் மகேஷ்</u>

திருச்சி மாவட்டம் திருவெறும்பூரில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 100 கர்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா இன்று நடைபெற்றது.

மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ்பொய்யாமொழி சீர்வரிசைகளை வழங்கி பேசுகையில், கர்பிணி பெண்கள் ஊட்டச்சத்துமிகு உணவை உட்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

<u>திண்டுக்கல் வாய்ஸ்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய்த்தடுப்பு திட்டத்தின் கீழ் கறவை மாடுகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் நாளை தொடங்குவதாக ஆட்சித்தலைவர் திரு. சரவணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம் வடக்கு காரசேரி ஊராட்சியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் ஒழுங்குமுறை கூடத்தை ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கு சிறப்பு மருத்துவமுகாமை ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் இன்று துவக்கிவைத்தார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் சொத்துவரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும், வரியில்லா கட்டணங்களையும் **UPI** செயலி மூலம் மக்கள் எளியமுறையில் செலுத்திட மாநகராட்சி ஆணையர் திரு.வே.சரவணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் 3-ம் கட்ட சிறப்பு முகாம்கள் நாளையும் நாளைமறுநாளும், ஊராட்சி பகுதிகளில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ரத்னசாமி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

ஐ.சி.சி.

ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

கராச்சியில் இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் பாகிஸ்தான் - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இந்தியா தனது முதல் போட்டியில் துபாயில் நாளை பங்களாதேஷுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖

டேபிள் டென்னிஸ்

சீன ஷென்ஸனில் நடைபெறும் ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா - கத்தாரின் அயாவை வென்றுள்ளார்

பிற ஆட்டங்களில் யசஷ்வினி, ஹர்மீத், மானவ் உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர். வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன

❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

வதோதராவில் நடைபெறும் மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் **UP** வாரியர்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை இன்றிரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖